இன்பம் வேண்டுமா?

வெற்றிகரமான வாழ்க்கை வாழுங்கள்

வாழ்க்கையில் வெற்றி என்றால் என்ன? முதலில் இந்தக் கேள்விக்கு விடை தெரிந்தால்தான், அந்த 'வெற்றியை அடைவது எப்படி?' என்னும் அடுத்த கேள்விக்கு நாம் போகமுடியும்.

விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளில்கூட, பழைமையானகொள்கைகள், புதுமையான கொள்கைகள் என இருவகைக் கொள்கைகள் இருக்கின்றன. இதேபோல், வெற்றி என்பதைப் பற்றியும் இரண்டு கொள்கைகள் இருக்கின்றன.

நிறையப் பணம் சம்பாதிப்பது, சமூகத்தின் உயர் மட்டத்தில் உள்ள பெரிய மனிதர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்துக்கொள்வது, பெரிய பட்டங்களையும் பதவிகளையும் அடைவது, பெரிய பங்களாவில் வசிப்பது, பெரிய கார்களில் சவாரி செய்வது ஆகிய இவைதாம் வெற்றிகரமான வாழ்க்கையின் இலக்கணங்கள் என்பது பழைய கொள்கை.

பூமி தட்டையாய் இருக்கிறது என்பது பழைய கொள்கை. அது உருண்டையாய் இருக்கிறது என்பது புதிய கொள்கை. இந்தப் புதிய கொள்கைதான் உண்மையானது— பழைய கொள்கை உண்மையானது அல்ல— என்பது எல்லாருக்கும் தெரியும். இருந்தாலும், அனுபவத்தில் பூமி உருண்டையாய் இருப்பதை எவராலும் பார்க்கமுடிவது இல்லை. அதனுடைய தட்டையான தோற்றத்தைத் தான் நாம் கண்கூடாகக் காணமுடிகிறது.

இதுமாதிரியே,

வெற்றிகரமான வாழ்க்கையின் இலக்கணங்கள் எவை என்பதைப்பற்றி, மனஇயல் நிபுணர்களால் இப்போது ஒரு புதுமையான கொள்கை வரையறுக்கப்பட்டிருக்கிறது என்றபோதிலும், அதை அனுபவத்தில் உணர்ந்து கடைப் பிடிப்பவர்கள் மிகமிக அரிதாகவே காணப்படுகிறார்கள்.

அதாவது, ஏராளமான பணத்தையும், அந்தப் பணத் தின் மூலம் அடையக்கூடிய ஏராளமான வசதிகளையும் எவன் பெற்றிருக்கிறானோ, அவன்தான் வாழ்க்கையில் வெற்றி அடைந்தவனாகக் கருதப்படுகிறான். இது ஒரு தவறான கருத்து.

ஏனென்றால், வாழ்க்கையில் தோல்வி அடைந்தவர் களுள் பெரும்பாலோர், பணக்காரர்களாகவே இருக் கிறார்கள். 'என்னுடைய பெரும் செல்வத்தால், நான் தொல்லைகளை அடைந்திருக்கிறேனே தவிர, சுகத்தை அடையவில்லை' என்று சொல்லுபவர்கள்தாம் நிரமபப் பேர் இருக்கிறார்கள்.

பல்வலியால் துடித்துக்கொண்டிருப்பவன், உ ல கி ல் பல்வலி இல்லாதவர்களெல்லாரும் மிக இன்பமாக வாழ் வதாய் எண்ணிக்கொள்வான்!

இதுபோல்தான், வறுமையால் வாடுபவர்களெல்லாம் செல்வம் உடையவர்கள் சிறப்பாக வாழ்வதாய் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். பொருளைச் சேர்த்துக்கொள் வதே வெற்றியின் இலக்கணம் என்னும் பழைய கொள்கை உலகில் உள்ள வறிஞர்களாலேயே வகுக்கப்பட்டது!

வறுமை மட்டும் அல்ல. எந்த ஒரு துன்பமாய் இருந் தாலும், அது நீங்கும் சமயத்தில் சிறிது இன்பமாய்த்தான் இருக்கும். ஆனால், அந்த இன்பம் தொடர்ந்து நீடிக்காது. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது காரணம், துன்பம் நீங்கின சமயத்திலே நமக்கு ஏற்பட்ட ஆறுகலும் அமைதியும், நம் உள்ளத்திலே

அப்படியே நிரந்தரமாக நிலைத்துவிடுவது இல்லை. எத்தனையோ காரணங்களால், நம் உள்ளம் விரைவில் சலனம் அடைந்துவிடுகிறது. உள்ளம் சலனம் அடைந்த வுடன், துன்பநீக்கத்தால் நமக்குக் கிடைத்த இன்ப உணர்ச்சியும் மறைந்துவிடுகிறது!

இரண்டாவது காரணம், நமக்கு வறுமையோ பல்வலியோ போன்ற ஒரு துன்பந்தான் உண்டு என்பது இல்லை. வாழ்க்கையில் நாம் எத்தனையோ வகையான துன்பங்களைச் சந்திக்க வேண்டியதாய் நேருகிறது. எனவே, ஒரு துன்பம் நீங்கினவுடன் நமக்கு ஏற்படுகிற இன்ப உணர்ச்சியானது, இன்னொரு துன்பம் வரும் போது கலைந்து போய்விடுகிறது!

பல்வலி இல்லாதவனுக்குத் தலைவலி இருக்கலாம் அல்லது வயிற்றுவலி வரலாம். அல்லது முடக்குவாதம் வந்து, பல்வலிக்காரனைவிட மிகக் கொடுமையான வேதனைகளை அவன் அனுபவித்துக்கொண்டிருக்கலாம்.

இதேபோல, வறுமை இல்லாத செல்வர்கள், வேறு ஏதாவது ஒரு சிறுமைக்கு ஆளாகிச் சீரழிந்து நிற்கலாம். அவர்களுக்குப் பகைவர்களால் அச்சம் ஏற்படலாம், மனைவியால் அவமானம் ஏற்படலாம். மக்களால் ஏமாற்றம் ஏற்படலாம். தொழிலாளர்களால் தொல்லை ஏற்படலாம். வழக்குகளில் தோல்விகள் ஏற்படலாம். அரசாங்கத்திடமிருந்து ஆபத்துகள் ஏற்படலாம். அல்லது தங்களுடைய செல்வத்தின பயன்களையே அனுபவிக்க முடியாதபடி, அவர்கள் உடம்பில் ஏதாவது நோய்கள் தோன்றலாம்.

இப்படியெல்லாம் நேர்ந்துவிடுமானால், பணம் ஒன்று மட்டும் இருப்பதைக்கொண்டு, அவர்களுடைய வாழ்க் கையை இன்பமான வாழ்க்கை என்று எப்படிச்சொல்வது? உள்ளத்தில் அமைதி இல்லாத வாழ்க்கையை எப்படி வெற்றிகரமான வாழ்க்கை என்று ஒப்புக்கொள்ளமுடியும்?

இதனால்தான், இன்றைய மனஇயல் வல்லுநர்கள், பணத்தைத் தேடிக்கொள்கையை ஒப்புக்கொள்வது இல்லை! வெற்றி என்றால் என்ன என்பதைப் பற்றி, அவர்கள் ஒரு புதிய கொள்கையை வகுத்திருக்கிறார்கள்.

அதாவது, மனிதனுக்குப் பணம் வரலாம் போகலாம், பதவி வரலாம் போகலாம், இப்படியே எது வேண்டுமானாலும் வரலாம் போகலாம்.

ஆனால், இப்படி மாறி மாறி வந்துகொண்டும் போய்க் கொண்டும் இருக்கிற எதையும்கருத்தில்கொண்டு, ஒரு மனிதன் வெற்றியாளனா தோல்வியாளனா என்பதை முடிவுகட்டக் கூடாது.

அதற்குப் பதிலாக,

எது வந்தாலும் போனாலும், எவன் ஒருவன் தன்னுடைய தன்னம்பிக்கையைக் கைவிடாமல் இருக்கிறானோ,

எவ்வளவு பெரிய தோல்வியிலும், எவன் மனம் தளராமல் இருக்கிறானோ,

எவ்வளவு பெரிய சோதனையான கட்டத்திலும் எவன் கலங்காமல் இருக்கிறானோ,

எவ்வளவு பெரிய துன்பங்களையும் எவன் புன்னகையோடு பொறுத்துக்கொள்கிறானோ,

எவ்வளவு பெரிய ஆபத்துகளையும் எவன் துணிவோடு எதிர்த்து நிற்கிறானோ,

எவ்வளவு பெரிய இழப்பையும் எவன் பொருட்படுத்தாமல் மறந்துவிடுகிறானோ,

எவ்வளவு பெரிய நெருக்கடியிலும், எவன் தன் நிதானத்தையும் கண்ணியத்தையும் நழுவவிடாமல் நடந்துகொள்கிறானோ,

அவனே,

வாழ்க்கையில் வெற்றியாளனாக விளங்குகிறான் என்பது இன்றைய மனஇயல் நிபுணர்களால் வகுக்கப்பட்டுள்ள புதிய கொள்கை!

நம்முடைய திருக்குறள் போன்ற பழைமையான நூல்களிலும், இந்தக் கொள்கைதான் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. பைபிளிலும் பகவத்கீதையிலுங்கூட, இதே கொள்கைதான் பேசப்படுகிறது.

எனவே,

இது பழைமைக்கும் பழைமையானது, புதுமைக்கும் புதுமையானது.

அதாவது,

இது காலத்தினால் மாறுபடாதது. ஆகையால், இதுதான் உயரிய கொள்கை! உண்மையான கொள்கை!

செல்வத்தை அல்லது பதவியைக் கொண்டு ஒருவரது வாழ்க்கையின் வெற்றி தோல்விகளை மதிப்பிடுவதென்றால் கையில் காலணா வைத்துக்கொள்ளாத மகாத்மா காந்தி ஒரு தோல்வியாளர்; வட்டிக்கடை முதலாளிதான் வெற்றியாளர். இயேசுநாதர் ஒரு தோல்வியாளர்; அவருடைய வழக்கை விசாரித்த ரோமன் கவர்னர் பிலாத்துதான் வெற்றியாளன்!

இதை உலகம் ஏற்றுக்கொள்ளுமா?

வாழ்க்கையின் கடுமையான தாக்குதல்களுக்கிடையே எவன் தன் மன அமைதியை இழந்துவிடாமல் எதிர்த்து நின்று போராடுகிறானோ, அவனே உண்மையான வெற்றியாளன், அந்தப் போராட்டத்தில் தோல்வியுற்றால்கூட அவன் வெற்றியாளன்தான். இதில் சிறிதும் ஐயம் இல்லை.

ஏனென்றால்,

வெற்றியும் தோல்வியும் ஒருவன் முயற்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய பலனைப் பொறுத்து முடிவு செய்யப்படு

பவை அல்ல; அவன் முயற்சி செய்யும் **விதத்தைப்** பொறுத்தே அவை முடிவு செய்யப்படுகின்றன.

நாடக மேடையிலே, இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நடக்கிறது. இராவணன் இறந்துவிடுகிறான், இராமன் வென்றுவிடுகிறான். அதற்காக, இராவணனாக வேடம் பூண்டவன் மட்டமான நடிகன் — இராமனாக வேடம் பூண்டவன் சிறப்பான நடிகன் என்று முடிவு கட்டி விட இயலாது!

உண்மையில்,

இராவண வேடக்காரனே சிறப்பான நடிகனாய் இருந்திருக்கக்கூடும். அவனுடைய நடிப்பின் சிறப்பை, போரின் **முடிவைக்கொண்டு** தீர்மானிக்கக்கூடாது. அவன் போர் புரிந்த **விதத்தைக்கொண்டுதான்** தீர்மானிக்க வேண்டும்.

இதேபோல்,

வாழ்க்கையில் ஒருவன் வெற்றியாளனா தோல்வியாளனா என்பதை, அவன் அடைந்திருக்கிற இலாபங்களை அல்லது நஷ்டங்களைக்கொண்டு தீர்மானிக்கக் கூடாது. அதற்குப் பதிலாக, அந்த வாழ்க்கையை அவன் எப்படி **நடத்துகிறான்**. தனக்கு நேரும் சவால்களை அவன் எப்படிச் **சந்திக்கிறான்** என்பதைப் பொறுத்தே தீர்மானிக்க வேண்டும்.

தான் எடுத்துக்கொண்ட ஒரு சிறு முயற்சியிலும் எவன் தன்முழுக் கவனத்தையும் செலுத்திப் பாடுபடுகிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

கொடிய வறுமையிலும் எவன் தன் பெருமையை விடாமல் நடந்துகொள்கிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

அடுத்து அடுத்து ஆயிரம் தோல்விகளுக்கும் ஏமாற்றங்களுக்கும் ஆளானாலும், எவன் தன் லக்கத்தைக் கைவிடாமல் புதுப்புது முயற்சிகளில் ஈடுபடுகிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

நாற்புறங்களிலும் ஆபத்துகளால் சூழப்பட்ட நிலையிலும் துணிவைக் கைவிடாமல் எவன் தன் கடமைகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

தான் எடுத்துக்கொண்ட ஒரு கொள்கைக்காக அல்லது குறிக்கோளுக்காக, எவன் எத்தகைய தியாகத்துக்கும் தயாராக இருக்கிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

காலத்தின் அருமையை உணர்ந்து, அதைச் சிறிதும் வீணாக்காமல் எவன் பயனுள்ள வகையில் செலவிடுகிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

உழைத்துத்தான் ஆகவேண்டும் என்ற அவசியம் இல்லாவிட்டாலும், உழைப்பிலேயே இன்பங் காண்பவனாய், அந்த இன்பத்திற்காகவாவது எவன் இடைவிடாமல் உழைத்துக்கொண்டிருக்கிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

மற்றவர்களால் தனக்கு என்ன ஆதாயம் என்பதை எண்ணிப் பார்க்காமல், தன்னால் மற்றவர்களுக்கு என்ன ஆதாயம் என்று எவன் எண்ணிப் பார்க்கிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

பிறருக்கு நன்மைசெய்து, அதில் அவர்கள் அடையும் மகிழ்வைக் கண்டு எவன் தானும் மகிழ்வு அடைகிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

மிகவும் பதற்றமான சூழ்நிலையிலும் எவன் பதற்றம் அடையாமல் இருக்கிறானோ, மிகவும் ஆத்திரமூட்டத்தக்க சூழ்நிலையிலும் எவன் ஆத்திரம் அடையாமல் இ க்கிறானோ, அவனுடை வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

எவனால் தன் கொடிய பகைவர்களையும் மன்னித்துவிட முடிகிறதோ, பிறர் செய்த கொடிய தீங்குகளையும் எவனால் மறந்துவிட முடிகிறதோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

எத்தகைய இருள்மயமான சூழ்நிலையிலும் எவனால் ஒரு சின்னஞ்சிறு ஒளிக்கதிரைக் காணமுடிகிறதோ, எவ்வளவு பெரிய தீமையிலும் ஒரு நன்மை இருப்பதை எவனால் உணர முடிகிறதோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

எவனால் எப்போதுமே சுறுசுறுப்பாகவும் முகமலர்ச்சியுடனும் காட்சியளிக்க முடிகிறதோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

எவன் தன்னுடைய பழக்கவழக்கங்களில் உள்ள குற்றம் குறைகளை உணர்ந்து, அவற்றை அவ்வப்போது திருத்திக்கொள்கிறானோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

பிறர் தன்னைப் போற்றும்போது மகிழ்ச்சியடையாமலும், தூற்றும்போது வருத்தம் அடையாமலும் எவனால் இருக்க முடிகிறதோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

பிறரைக் கண்டிக்கும்போதுகூட எவனால் இனிமையான சொற்களையே பேச முடிகிறதோ, அவனுடைய வாழ்க்கை வெற்றிகரமான வாழ்க்கை!

இத்தகைய வெற்றிகரமான வாழ்க்கையை நாம் பெற்றுவிடுவோமானால், அப்புறம் நமக்குத் தோல்வி என்பதே இருக்காது! துன்பம் என்பதே இருக்காது.

எல்லாம்,

எப்போதும்,

எங்கும்,

நம்மைப் பொறுத்த மட்டில் இன்பமயமாகவே இருக்கும்.

இன்பம் வேண்டுமா?

இன்பத்தில் இரண்டு வகைகள் இருக்கின்றன.

ஒன்று,

நம்முடைய மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களின் வாயிலாக அடையப்படுகிற இன்பம்.

மற்றொன்று,

இந்த ஐம்புலன்களின் தயவு இல்லாமலே நாம் எப்போதும் அனுபவிக்கக்கூடிய ஓர் ஆனந்தம்.

ஐம்புலன்களின் வாயிலாக நாம் இன்பம் அனுபவிக்க முற்படும்போது, நமக்குப் பிரியமான சில உலகியல் பொருள்கள் இன்றியமையாதவையாய் ஆகிவிடுகின்றன.

எடுத்துக்காட்டாக,

நமக்குப் பிரியமான உணவு கிடைத்தால்தான், வாயினால் பெறப்படுகிற இன்பத்தை நாம் பெறமுடியும். பிரியம் இல்லாத பொருள்களை நாம் சுவைக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டால், நமக்குத் துன்பந்தான் ஏற்படுகிறது.

இதேபோல,

நமக்குப் பிரியமான காட்சிகளைக் கண்டால் இன்பம்; பிரியமில்லாத காட்சிகளைக் கண்டால் துன்பம்.

பிரியமான நறுமணத்தை முகர்ந்தால் இன்பம்; பிரியமில்லாத தீய மணத்தை முகர்ந்தால் துன்பம்.

பிரியமான சங்கீதத்தைக் கேட்டால் இன்பம்; சண்டை இரைச்சலைக் கேட்டால் துன்பம்.

மெத்தென்ற பஞ்சணையில் படுத்தால் இன்பம்; கரடு முரடான பாறாங்கல்லில் படுத்தால் துன்பம்.

உள்ளத்தின் அமைதியை நாம் எப்படி அடைவது?

நம் உள்ளம் எப்போதுமே அமைதியைத்தான் விரும்புகிறது. சோம்பலும், சுயநலமுமே அந்த அமைதியைக் கெடுக்கின்றன.

எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருக்கவேண்டும் என்ற ஆசைக்குத்தான் சோம்பல் என்று பெயர். அப்படிச் சும்மா இருப்பதிலே பெரிய ஆனந்தம் இருப்பதாகப் பல பேர் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எந்த ஓர் உழைப்பும் இல்லாமல் உழைப்பதற்கான வாய்ப்பும் இல்லாமல் சும்மா இருப்பதைப்போல் ஒரு கடுமையான தண்டனை உலகில் இன்னொன்று கிடையாது. சும்மா இருப்பது என்பது உயிர்களின் இயல்புக்கே முற்றிலும் மாறானது.

ஒரு மனிதன் மரணம் அடைந்தான். அவனுடைய ஆவி வேறோர் உலகத்துக்குப் போய்ச் சேர்ந்தது. அந்த உலகில் ஓர் அழகான கிராமப்புறம். அங்கே எல்லா வசதிகளும் அமைந்த ஒரு கிராமிய பங்களா. அந்த மாதிரி ஒரு பங்களாவில் சுகமாக வாழவேண்டும் என்பதே அந்த மனிதனுடைய நெடுநாளைய ஆசை. எனவே, அந்தப் பங்களாவைக் கண்டவுடன் அதன் முகப்பிலே போய் அவன் மகிழ்ச்சியோடு உட்கார்ந்தான். உட்கார்ந்து சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு, அவனுக்குப் 'போர்' அடிக்கத் தொடங்கியது. 'உள்ளே யாரும் இல்லையா?' என்று உரக்கக் கூப்பிட்டான். உடனே பங்களாவின் உள்ளேயிருந்து ஒரு வேலைக்காரன் வெளியே வந்தான். 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என்று பணிவோடு கேட்டான், அந்த வேலைக்காரன். 'சாப்பிடுவதற்கு ஏதாவது கொண்டுவா'என்றான் அந்த மனிதன். அவனுக்கு மிகவும் பிரியமான உணவுப் பொருள்களாகத் தேர்ந்து எடுத்து அவன் எதிரே கொண்டு வந்து வைத்தான்வேலைக்காரன். சாப்பிட்டு முடிந்ததும், 'நான் படுத்து உறங்கவேண்டும்' என்றான். வேலைக்காரன் அவனுக்கு ஒரு வெல்வெட்டு மெத்தையும் தலையணைகளும் கொண்டுவந்து கொடுத்

தான். இப்படியே வேளாவேளைக்குச் சாப்பிடுவதும் உறங்குவதுமாக நாள்கள் பல கழிந்தன. அந்த மனிதனுக்கு அலுப்புத் தட்டத் தொடங்கியது. ஒருநாள், 'நான் படிப்பதற்கு ஏதாவது நூல்கள் கிடைக்குமா?' என்று கேட்டான் அவன். வேலைக்காரன் அவன் கேட்ட புத்தகங்கள் அனைத்தையும் கொண்டுவந்து கொடுத்தான். புத்தகங்களைப் படிப்பதிலேயே சில நாள்கள் சென்றன. அதன் பிறகு, அதிலும் அலுப்புத் தட்டியது. 'இங்கே ஏதாவது விளையாட்டு மைதானம் இருக்கிறதா?' என்று கேட்டான் அந்த மனிதன். 'ஒன்று அல்ல, இரண்டு அல்ல, எத்தனையோ மைதானங்கள் இருக்கின்றன. அத்தனையிலும் நீங்கள் போய் விளையாடலாம்' என்று பதில் அளித்தான் வேலைக்காரன். அப்படியே அந்த மனிதன் அத்தனை மைதானங்களிலும் போய் விளையாடி வந்தான். நாளடைவில் அதிலும் அவனுக்கு அலுப்புத் தட்டிவிட்டது. அதற்கு மேல் என்ன செய்வது என்று அவனுக்குப் புலப்படவில்லை. கடைசியாக, அவன் அந்த வேலைக்காரனைக் கூப்பிட்டான். 'எனக்கு நீ எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கிறாய். இருந்தாலும் எனக்கு மனத்தில் அமைதியில்லை. காரணம், என் காலத்தையெல்லாம் சும்மா வீணாக்கிக் கொண்டிருப்பதாக உள்ளூர எனக்கு ஒரு குற்ற உணர்ச்சி ஏற்படுகிறது. ஆகையால், இனிமேலாவது நான் காரியங்களில் ஈடுபட வேண்டும். எனக்கு ஏதாவது ஒரு வேலை கொடு' என்று கேட்டான் அந்த மனிதன். 'ஐயா, இது உங்கள் பூலோகம் அல்ல. பூலோகத்தில்தான், நீங்கள் பயனுள்ள காரியங்களைச் செய்யமுடியும். இந்த உலகத்தில் உங்களுக்கு வேறு எது வேண்டுமானாலும் கொடுப்போம் ஆனால், வேலை மட்டும் கொடுக்க மாட்டோம்' என்றான் வேலைக்காரன்! அந்த மனிதனுக்குக் கோபம் வந்து விட்டது. 'இது இவ்வளவு மட்டமான உலகம் என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டது. தெரிந்திருந்தால், நான் இங்கு வந்திருக்க மாட்டேன். இதைவிட நரகலோகத்துக்கே போயிருப்பேன்!' என்று அவன் ஆத்திரமாய்ப் பேசினான்! வேலைக் காரன் சிரித்துக்கொண்டே, 'இதை

வேறு என்ன உலகம் என்று எண்ணிக்கொண்டிருக் கிறீர்கள்? இதுதான் ஐயா நரகலோகம்' என்றானாம்!

இது ஒரு பழைமையான மேனாட்டுக்கதை.

நிழலின் அருமை வெயிலில்தான் தெரியும். அதே போல, வேலையின் அருமை, நாம் செய்வதற்கு எந்த வேலையுமே இல்லை என்னும்போதுதான் தெரியவரும்.

வேலைதான் உள்ளத்திற்கு அமைதியைத் தருகிறது. அந்த அமைதியே, ஐம்புலன்களின் துணைகொண்டு அரிய பெரிய உலகியல்பொருள்களால் அடையப்படுகிற இன்பங் களைவிட, மிகவும் மேலான ஓர் ஆனந்தம்!

ஆகையால்,

நாம் ஏழையாய் இருந்தாலும் வேலை செய்ய வேண்டும். பணக்காரனாய் இருந்தாலும் வேலை செய்ய வேண்டுமா. மகிழ்ச்சியோடு இருக்கும்போதும் வேலை செய்யவேண்டும். வருத்தத்தோடு இருக்கும்போதும்வேலை செய்ய வேண்டும். உயிரோடு இருப்பதற்கு மூச்சு விடுவது எவ்வளவு இன்றியமையாததாய் இருக்கிறதோ, அதே போல், நாம் அமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்வதற்கு வேலை செய்வது அவ்வளவு இன்றியமையாத தாய் இருக்கிறது.

நம்முடைய உழைப்பின் பயன் முழுவதும் நமக்கே கிடைக்க வேண்டும் என்று நாம் ஆசைப்படக்கூடாது அப்படி ஆசைப்படுவது சுயநலம். அது நம் மன அமைதி யைக் கெடுத்துவிடும்.

ஒரு மனிதன் இறந்தபிறகு தேவலோகம் சென்றா னாம். அங்கே இரண்டு பெரிய மண்டபங்கள் இருந்தன வாம். முதலாவது மண்டபத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் எலும்பும் தோலுமாய் மெலிந்து போய் இருந்தார் களாம். இரண்டாம் மண்டபத்தில் இருந்தவர்கள். நன்கு பருத்துக் கொழுத்துப்போய்க் காணப்பட்டார்களாம். தேவலோகத்தில்கூட இந்தப்பாகுபாடா?' என்று வியப்பு

அடைந்தான் அந்த மனிதன். அந்த சமயத்தில் சாப்பாட்டு மணி அடிக்கும் ஓசைகேட்டது. உடனே அவன் முதலாவது மண்டபத்தின் பக்கமாகப் போய் எட்டிப் பார்த்தான். உள்ளே வரிசையாக எல்லோரும் சாப்பாட்டுக்கு உட்கார்ந் திருந்தார்கள். ஒவ்வொருவர் எதிரிலும் மிகவும் சுவை யான உணவுப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றை எடுத்து உண்பதற்கான கரண்டிகளும் அவர்கள் கைகளிலே காணப்பட்டன. ஆனால், அந்தக் கரண்டிகள் ஒவ்வொன்றும் இரண்டு முழ நீளம் இருந்தன. அது மட்டும் அல்ல. ஒவ்வொருவருடைய கையுடனேயும், அக்குளிலிருந்து மணிக்கட்டு வரையில் அக்கரண்டிகள் சேர்த்துக் கட்டப்பட்டிருந்தன.

கரண்டியோடு சேர்த்துக் கட்டப்பட்டுவிட்டதால் எவராலுமே முழங்கையை மடக்கமுடியவில்லை. முழங் கையை மடக்க முடியாததால், எதிரேயிருந்த தட்டுகளிலி ருந்து உணவுப்பொருள்களைக் கரண்டியால் எடுக்க முடிந் ததே தவிர, அவற்றை எவராலும் தங்களுடைய வாய்க்கு அருகில் கொண்டு வந்து உண்ணமுடியவில்லை. இதனால் அந்த மண்டபத்திலிருந்த அத்தனைப் பேரும் தங்கள்முன் வைக்கப்பட்டிருந்த சுவையான சாப்பாட்டைப் பசியோடு பார்த்துக்கொண்டிருந்தார்களே தவிர, அதை யாருமே சாப்பிடவில்லை. அவர்கள் எலும்பும்தோலுமாய்மெலிந்து போயிருந்ததன் காரணம், அந்த மனிதனுக்கு அப்போது தான் புலப்பட்டது! அடுத்தபடியாக, அவன் இரண்டா வது மண்டபத்துக்குச் சென்றான். அங்கேயும் ஒவ்வொரு வரது எதிரிலும் உணவுத்தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவருடைய முழங்கையும் மடக்கமுடியாதவாறு கரண்டியோடு சேர்த்துத்தான் கட்டப்பட்டிருந்தது. ஆனால், அதற்காகஅவர்கள்சாப்பிடாமல் இருக்கவில்லை. நன்றாகச் சாப்பிட்டுக்கொண்டே இருந்தார்கள். எப்படி? ஒருவருடைய முழங்கை மடக்க வராது என்றால், அவர்தம் முடைய கரண்டியால் அள்ளப்பட்ட உணவைத் தம்மு

டைய வாய்க்குத்தானே கொண்டு வரமுடியாது அதே உணவைத் தம் பக்கத்தில் உள்ளவரின் வாயிலே அவரால் ஊட்டுவதற்கு முடியுமல்லவா? அப்படி ஊட்டுவதற்கு, அவருடைய முழங்கை வளைய வேண்டும் என்ற அவசியம் இலையே. இ ண்டாவது மண்டபத்திலிருந்த ஒவ்வொரு வரும் தங்களுடைய உணவுத்தட்டில் உள்ள பொருள்களை எடுத்து, பக்கத்தில் உள்ளவரின் வாயிலே ஊட்டிக்கொண் டிருந்தார்கள். இதனால் எல்லாருமே வயிறு நிறையச் சாப்பிட முடிந்தது அவர்கள் ஒவ்வொருவரும் நன்கு பருதுக் கொழுத்துப்போயிருந்ததன் இரகசியம் அந்த மனிதனுக்கு இப்போதுதான் புரிந்தது.

இதுவும் ஒரு மேல் நாட்டுக் கதைதான். என்றாலும், எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொருத்த மான ஓர் அடிப்படைத் தத்துவம் இதில் அடங்கியிருக் கிறது!

அதாவது,

நம்முடைய உழைப்பின் பயன்கள் அனைத்தும் நம் மையே சேரவேண்டும் என்று எண்ணும்போது, முதலா வது மண்டபத்திலிருந்தவர்களைப்போல் நாம் எதையும் அனுபவிக்க முடியாதவர்கள் ஆகிவிடுகிறோம்!

நம்முடைய உழைப்பானது பிறருக்கும் பயனுள்ளதாய் இருக்கவேண்டும் என்று எண்ணும்போது இரண்டாவது மண்டபத்தில் இருந்தவர்களைப் போல, நாம் எல்லாவற் றையும் இனிதே அனுபவிக்கக்கூடியவர்கள் ஆகிவிடு கிறோம்!

இதுதான்:
வாழ்க்கையின்
இரகசியம்.
ஆனால்,
இதை
அனுபவத்தில்
கடைப்பிடிப்பதற்கான
மனப்பக்குவம்
எல்லாருக்கும்
இருப்பதில்லையே!

என் தலையாய பணி

நான்,

எழுத்தாளனாகப் பேனா பிடித்ததிலிருந்து, பல்வேறு வகையான புத்தகங்கள், கதைகள், கட்டுரைகள் எல்லாம் எழுதியிருக்கிறேன்.

இவை அத்தனையிலும்,

'மனிதன் தன்னைத் தானே உயர்த்திக்கொள்வது எப்படி?' என்னும் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட என் எழுத்துகள்தாம், எனக்கு உண்மையிலேயே மன நிறைவை அளிப்பவை ஆகும்.

நான் ஒரு பள்ளிமாணவனாக இருந்தபோது சிறுகதைகளிலும் நாவல்களிலும் என் உள்ளம் பெரிதும் ஈடுபாடு கொண்டது உண்டு.

ஆனால்,

நாளடைவில்,

வெறும் கதைப் புத்தகங்களின்பால் எனக்கு இருந்த கவர்ச்சிகுறையத் தொடங்கியது. டேல்கார்னிகி, நார்மன் வின்செண்ட் பீல், நெப்போலியன் ஹில் போன்ற சில மேல் நாட்டு ஆசிரியர்களின் நூல்கள் என் மனத்தைப் பெரிதும் கவர்ந்தன. அந்த நூல்களெல்லாம், நம்மை நாமே நன்கு உயர்த்திக்கொள்வது எப்படி என்பதை, மிகத் தெளிவான எளிய நடையில், நம் உள்ளத்தைத் தொடும் வகையில் விளக்கிக் கூறுபவையாய் இருந்தன. மக்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படக்கூடிய அம்மாதிரி அருமையான நூல்கள் தமிழில் இல்லை என்பதை அறிந்தபோது என்

உள்ளம் வருந்தியது. தமிழுக்கு இருந்த அந்தக் குறையை நிறைவு செய்வதற்காகவாவது நான் ஓர் எழுத்தாளன் ஆகவேண்டும் என்ற ஆர்வம், என் உள்ளத்தில் பொங்கி எழுந்தது.

ஒரு மனிதனுடைய தீவிரமான ஆர்வம் எதுவாய் இருந்தாலும், வாழ்க்கையில் அது நிறைவேறியே திரும் என்பது இயற்கையின் சட்டம். அந்தச் சட்டத்தின்படி யே தான் இன்றைக்கு நான் ஓர் எழுத்தாளனாக விளங்கிக் கொண்டிருக்கிறேன்.

இன்றைக்குங்கூட,

புத்தக வடிவத்திலோ, கதை வடிவத்திலோ, நான் எந்த ஒரு விஷயத்தை எழுதப் புகுந்தாலும், 'மனிதன் தன்னைத்தானே எப்படி உயர்த்திக்கொள்ள வேண்டும்?' என்பதுதான் என் எழுத்துகளின் ஆதார சுருதியாக அமைந்து இருக்கும். அந்தச் சுருதியைவிட்டு, என்னால் வேறு எந்தச் சுருதிக்கும் மாற முடிவது இல்லை!

நான் எழுத்தாளனாக வாழ்க்கையைத் தொடங்கிய நேரத்தில், தமிழகத்திலே தலைசிறந்த சிறுகதை எழுத் தாளர்கள் இருந்தார்கள். (இன்றைக்கும் இருக்கிறார்கள்.) தலைசிறநத நாவல் ஆசிரியர்கள் இருந்தார்கள். (இன்றைக் கும் இருக்கிறார்கள்). தலைசிறநத கலைஞர்கள் இருந் தார்கள். (இன்றைக்கும் இருக்கிறார்கள்). தலைசிறந்த நகைச்சுவைக்கட்டுரையாளர்கள் இருந்தார்கள். (இன்றைக் கும் இருக்கிறார்கள்). தலைசிறந்த இலக்கியக் கட்டுரை யாளர்கள் இருந்தார்கள். (இன்றைக்கும் இருக்கிறார்கள்).

ஆனால்,

இந்தப் பேனா மன்னர்களுள் எவருமே மனிதனுடைய சுயமுன்னேற்றத்தைக் கருவாகக்கொண்டு, தரமுள்ள புத்த கங்களை எழுதவில்லை.

என்னுடைய எழுத்துகள் அந்தத் துறையில் தமிழ் வாசகர்களுக்குச் சிறிது புதுமையாக இருந்திருக்க வேண்டும். எழுத்து உலகில் நான் இந்த அளவுக்குப் பெற்றுள்ள வெற்றிக்கு அதுவே ஒரு தலையாய காரணம் என்று நான் எண்ணுகிறேன்.

என் எழுத்துகளின் மூலம்,

மக்களை அவர்களுடைய முன்னேற்றத்துக்கு ஏற்ற வகையில் மேலும் மேலும் ஊக்குவித்துக்கொண்டிருப் பதையே, என் வாழ்க்கையில் நான் என்னுடைய தலையாய பணியாகக் கடைப்பிடித்து வருகிறேன்.

இதனால் எனக்கு என்ன இலாபம் என்று கேட்கிறீர் களா?

பிறரை அவமதிப்பவன், தானே அவமானத்துக்கு ஆளாகிறான். பிறரை மதித்து நடப்பவன், தானே மதிப் புக்கு உரியவன் ஆகிறான். பிறரை மகிழ்விப்பவன், தானே மகிழ்வு உடையவனாக விளங்குகிறான்.

இந்த முறையில்,

பிறரை ஊக்குவிப்பதன் மூலம் என்னால் எப்போதும் ஊக்கம் உடையவனாக விளங்க முடிகிறது. ஆகவே, அதில் எனக்கும் ஓரளவு சுயநலம் இருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்!

நமது உண்மையான இன்பமே பிறருக்கு நன்மை செய் வதில்தான் அடங்கி இருக்கிறது என்பது மிகப் பலருக்குத் தெரியாது. விஷயம் தெரிந்தவர்கள் தங்களுக்கு ஏதாவது ஒரு நன்மையைத் தேடிக்கொள்ள விரும்பினால், அந்த நன்மையை முதலில் பிறருக்குத்தான் செய்வார்கள். நாம் பிறருக்குச் செய்யும் நன்மைகள்தாம் ஒன்றுக்குப் பத்தாய் நமக்குத் திரும்பி வருகின்றன. நம்முடைய உடம்பின் நிழலில் நாமே ஒதுங்கி இளைப்பாற இயலாததுபோல்,

நமக்கு நாமே செய்துகொள்ளும் நன்மைகளால் நாம் அவ்வளவாகப் பயன் அடைய இயலுவது இல்லை!

ஆகையால்,

வாழ்வில் உங்களுக்கு ஏற்படும் மனச்சோர்வுகளைப் போக்கி, நீங்கள் ஊக்கம் மிகுந்தவர்களாய் ஆக விரும்பினால், (நீங்களும் என்னைப் போலவே) எல்லாரையும் ஊக்குவிக்கப்படுபவர்களும் உயர்வு அடைவார்கள், நீங்களும் உயர்வு அடைவீர்கள்!

ஏனென்றால்,

ஊக்கம் ஒன்றுதான் மனிதனுக்கு உயர்வை அளிக்கிறது. முன்னேற்றத்தைத் தருகிறது. இப்படி நான் சொல்லவில்லை; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த திருவள்ளுவரிலிருந்து, இன்றைய டேல் கார்னிகி வரையில் எல்லாரும் சொல்லுகிறார்கள். நாளைக்கு நீங்களும் சொல்லப் போகிறீர்கள, ஊக்கத்தின் அருமை பெருமைகளை அனுபவித்துப் பார்த்துவிட்டு.

நான் அவற்றை ஓரளவு அனுபவித்துப் பார்த்தவன். இன்றைக்கும் அனுபவித்துக்கொண்டிருக்கிறவன்.

ஆகையால்,

என்னுடைய வாசகர்களுக்கு, நான் என் அனுபவத்தில் கண்ட உண்மைகளையே ஆதாரமாகக்கொண்டு எழுத முடிகிறது. வெறும் புத்தகங்களில் படித்தவற்றை மட்டும் ஆதாரமாக வைத்து நான் எழுதுவதில்லை.

எக்காரணத்தாலோ மிகவும் மனம் தளர்ந்துபோய் உட்கார்ந்திருக்கிற ஒரு குடும்பத்தினரின் மத்தியிலே ஊக்கமும் மகிழ்ச்சியும் நிறைந்த ஒரு நண்பன் போய்ச் சேருவானாயின் சிறிது நேரத்துக்கெல்லாம் அந்தக் குடும்பத்தினர் அனைவருமே தங்கள் மனச்சோர்வு நீங்கி

உடையவர்கள் ஆகிவிடுவார்கள். என் வாசகர்களின் குடும்ப பங்களுக்கும், என்னுடைய எழுத்துகள் வாரா வாரம் அத்தகைய மகிழ்ச்சி ஊட்டும் நண்பனாக விளங்க வேண்டும் என்பதையே, வாழ்க்கையில் நான் என் தலையாய பணியாகக் கொண்டிருக்கிறேன்.

மனம் சோர்ந்து, உள்ளத்தில் அவநம்பிக்கை தோன்றி விட்டால், அத்தகைய நோயாளிகள் தங்கள் உடம்பில் உள்ள பிராணசக்தியிலே பத்தில் ஒரு பங்கை இழந்து விடுகின்றார்களாம்!

ஆகையால்,

என்னுடைய வாசகர்களுள் யாரேனும் நோயாளியாக இருந்தால், என்னுடைய எழுத்துகளின் மூலம் அவர்களுடைய அவநம்பிக்கையைப் போக்குவதையே, வாழ்க்கையில் நான் என் தலையாய பணியாகக்கொண்டிருக்கிறேன்.

அவநம்பிக்கை ஒழிந்து, உள்ளத்தில் நம்பிக்கைபிறந்து விட்டால், உடம்பில் உள்ள பிராண சக்தி தானாகவே கூடுதல் அடைந்துவிடுகின்றது. அப்போது நோயும் எளிதில் குணமாகத் தொடங்குகிறது. அந்த நிலையில் தான் மருந்துகளும் வேலை செய்கின்றன.

உள்ளத்தில் நம்பிக்கையை இழந்துவிட்ட நோயாளிக்கு மருந்துகள் வேலை செய்ய மாட்டா. ஆகையால் நோயாளிகளுக்கு மருந்துகளைப் புகட்டுவதைவிட அவன் உள்ளத்தில் நம்பிக்கையைப் புகட்டுவதே மிகப் பயனுள்ள பணி ஆகும்!

வாழ்க்கையில் எத்தனையோ வகையான ஏமாற்றங்களுக்கு மனிதன் ஆளாகிறான். இனிமேல் தனக்கு எதிர் காலமே இல்லை என்ற முடிவுக்குங்கூட, சில சமயங்களில் அவன் வந்துவிடுகிறான்!

இது தவறு!

டைய வாய்க்குத்தானே கொண்டு வரமுடியாது அதே உணவைத் தம் பக்கத்தில் உள்ளவரின் வாயிலே அவரால் ஊட்டுவதற்கு முடியுமல்லவா? அப்படி ஊட்டுவதற்கு, அவருடைய முழங்கை வளைய வேண்டும் என்ற அவசியம் இலையே. இரண்டாவது மண்டபத்திலிருந்த ஒவ்வொரு வரும் தங்களுடைய உபயோகத்தட்டில் உள்ள பொருள்களை எடுத்து, பக்கத்தில் உள்ளவரின் வாயிலே ஊட்டிக்கொண் டிருந்தார்கள். இதனால் எல்லாருமே வயிறு நிறையச் சாப்பிட முடிந்தது அவர்கள் ஒவ்வொருவரும் நன்கு பருகுதுக் கொழுத்துப்போயிருந்ததன் இரகசியம் அந்த மனிதனுக்கு இப்போதுதான் புரிந்தது.

இதுவும் ஒரு மேல் நாட்டுக் கதைதான். என்றாலும், எல்லா நாடுகளுக்கும் எல்லாக் காலத்திற்கும் பொருத்த மான ஓர் அடிப்படைத் தத்துவம் இதில் அடங்கியிருக் கிறது!

அதாவது,

நம்முடைய உழைப்பின் பயன்கள் அனைத்தும் நம் மையே சேரவேண்டும் என்று எண்ணும்போது, முதலா வது மண்டபத்திலிருந்தவர்களைப்போல் நாம் எதையும் அனுபவிக்க முடியாதவர்கள் ஆகிவிடுகிறோம்!

நம்முடைய உழைப்பானது பிறருக்கும் பயனுள்ளதாய் இருக்கவேண்டும் என்று எண்ணும்போது இரண்டாவது மண்டபத்தில் இருந்தவர்களைப் போல, நாம் எல்லாவற் றையும் இனிதே அனுபவிக்கக்கூடியவர்கள் ஆகிவிடு கிறோம்!

இதுதான்:
வாழ்க்கையின்
இரகசியம்.
ஆனால்,
இதை
அனுபவத்தில்
கடைப்பிடிப்பதற்கான
மனப்பக்குவம்
எல்லாருக்கும்
இருப்பதில்லையே!